வினாக்கள்—விடைகள்.

பொதுப் பெயரின்கீழ் வரவேண்டும் என்று விருப்பம் தெரிவித்து பல கோரிக்கைகள் வந்தன என்றும், தேவர் என்பது பட்டப் பெயரே அன்றி, இது ஒரு ஜாதியின் பெயரே அல்ல; எனவே, இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்வது கடினம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இப்படி, தனித்தனியாக இயங்குகின்ற அமைப்புக் கள் அனைத்தும், ஒன்று சேர்ந்து ஒரு குடையின் கீழ், எங்களை முக்குலத்தோர் என்று அழைக்க வேண்டும் என்று தெரிவித்தால் தான், அது அரசுக்கு எளிமையாக இருக்கும். இல்லையென் றால், அவசரப்பட்டு அறிவித்து விட்டு, மற்றவர்கள் அதிலே இணைய மறுத்தால், பிரச்சினை உருவாக ஏதுவாகும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளர், பறையர், அருந்ததியர் என்ற பிரிவினரை ஒன்றாக ஆக்கி, ஆதி திராவிடர் என்ற ஒரே பிரிவினராக ஆக்கு வதற்கு அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரையும் ஒன்றாக்கி தமிழர் என்ற ஒரே பிரிவிலே கொண்டுவரவேண்டும் என்றுதான் அரசு விரும்புகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் மறவர் இனத்ததோர் அகமுடையர் மெல்ல மெல்ல வந்து, வெள்ளாளர் ஆனார் என்று எங்கள் பகுதி யிலே கூறுவார்கள். அவர்களெல்லாம் வெள்ளாளர்களாக ஆகி விட்டு இன்று நூற்றுக்கணக்கான ஜாதிகளும் ஏற்பட்டிருக்கின் றன. அதிலே சில உயர்ஜாதிக்காரர்கள் தலை நிமிர்ந்து, தங் கள் பெயருக்குப் பின்னால், ஜாதியைப் போட்டு அழைக்கப்படு கிறார்கள். எங்களைப் போன்ற தாழ்த்தப்பட்டவர்கள், அவ் வாறு போட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, பெயருக்குப் பின்னால், ஜாதியைப் போடுவதை, இந்த அரசு தடை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல உண்மையைப் பெண்களிடம் ஆண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். பெண்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் ஜாதியின் பெயரைப் போடுவதில்லை.

வி.ஐ.பி.-க்களின் சுற்றுப் பயணம்.

*6633. திரு. எஸ்.டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வி.ஐ.பி.-க்களின் சுற்றுப் பயணத்தின் சமயம் அந்தந்த பகுதியில் உள்ள காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை பாதுகாப்பிற்காக பயன்படுத்துவதை தவிர்க்க அரசிடம் செயல் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) வி.ஐ.பி.-க்களின் சுற்றுப் பயணத்தின் சமயம் அந்தந்த பகுதியில் உள்ள காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை பாதுகாப்பிற்காக பயன்படுத்துவதை தவிர்க்க அரசிடம் செயல் திட்டம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வி.ஐ.பி.-க்கள் சுற்றுப் பயணம் செய்கின்ற நேரத்தில் காவல் நிலையத்திலே இருக்கின்ற காவலர்கள் மற்றும் அதிகாரிகள் பாதுகாப்புக்காக சென்று விடுவதன் காரணமாக, பல்வேறு பிரச்சினைகளில், அந்தப் பகுதியில் பல சமூக விரோதிகள் நாட்டிற்கு நாசத்தை விளைவித்து, கலவரங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த காவலர்களை அங்கிருந்து கொண்டு செல்வது கூடாது என்ற கருத்து ஏற்கனவே பலமுறை இந்த மாமன்றத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

9-10 மணி

அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக தனியாக ஒரு படையை அரசு ஆரம்பிக்குமா என்று அறிய விரும்பகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே வி.ஐ.பி.-க்கள் செல்கிற நேரத்தில் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியதும் மிக அவசியம் ஆகிறது. அப்படிச் சில இடங்களில் அந்தப் பாதுகாப்பிலே குறை ஏற்பட்டால் அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டத் தவறுவது இல்லை. எனவே, இதுவும் வேண்டும். அதுவும் வேண்டும், ஆனால் இரண்டும் அளவோடு இருக்கவேண்டுமென்பதுதான் இந்த அரசின் கொள்கை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டும் தேவை என்று சொல்லியிருக்கின்றார்கள். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை, என்ற முறையில்தான் இன்றைக்கு நாம் இருந்துகொண்டு வருகிறோம். மக்களுடைய பாதுகாப்பு தான் முக்கியத்துவம் வாய்ந்தது என்ற முறையில் நம்முடைய முக்கியப் பிரமுகர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக தனியான அமைப்பு இருந்தால் நல்லது என்பதை ஏற்கெனவே நான் சொல்லியிருக்கின்றேன். ஆனாலும் சமீபத்தில் நடைபெற்ற போடி கலவரத்தில் கூட சொன்னார்கள், காவலர்........

1990 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் எல்லாம் வேண டாம். இது என்ன சொற்பொழிவா? வினாவை மட்டும் கேளுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : அந்த நேத்தில்கூட காவலர்கள் அங்கு செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆதலால், இன்றைக்கு ஆர்ம்ட் ஃபோர்ஸ் போன்ற மற்ற அமைப்புக்களை வைத்திருக்கின் றோம். அதன் காரணமாக, அவர்களையும், அதோடு மட்டு மல்லாமல் கிராமத்திலே ஆங்காங்கே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : அதுபோன்று, கிராமத்திலே ஒரு பாதுகாப்பு என்ற முறையிலே ஏதாவது அமைப்பதற்கு அரசாங் கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே ஏற்கெனவே டி.ஐ.ஜி. (இன்டெலிஜன்ஸ்) கண்ட்ரோலில் ஒரு '' செக்யூரிட்டி விங் '' செயல்பட்டு வருகிறது. அதுவும் போதா மல், 1987 ஆம் ஆண்டு, ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டோ என்னவோ எனக்குத் தெரியாது, 9—1—1987-இலேயிருந்து கமாண்டோ படை என்ற ஒரு படை அப்போது அமைக்கப்பட்டு, அந்தப் படை, 4 ஹவில்தார்கள், 2 நாயக்குகள், 3 லான்ஸ் நாயக்குகள், மற்றும் 52 இரண்டாம் நிலைக் காவலர்கள் கொண்டதாகச் செயல்பட்டு வருகிறது. அவர்கள் ' ஸ்டென்_கன் ' கூடப் பயன்படுத்துகிறார்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வி.ஐ.பி. பட்டியலிலே யார் யார் இடம் பெறுகிறார்கள்? தனி யாக வி.வி.ஐ.பி. என்ற ஒரு பட்டியலும் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர்கள், சட்டப் பேரவைத் தலைவர், சட்டப் பேரவைத் துணைத் தலைவர், தலைமை நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதி பதிகள், தமிழ்நாட்டு ஆளுநர், குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர், துணைப் பிரதமர், வெளி மாநில அமைச்சர்கள், வெளி மாநில ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகள், வெளிநாட்டு முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அமைச்சரக அந்தஸ்துடைய முக்கிய நபர்கள் மற்றும் செல்வாக்கு மிக்க தலைவர்கள்—இவர்களெல்லாம் வி. ஐ. பி-க் களாக கருதப்படுகிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களையும் காப்பாற்ற வேண்டும், வி.ஐ.பி.-க்களையும் காப்பாற்ற வேண்டிய கடமை அரசிற்கு உண்டு. ஆனால் இன்றைய தினம் காவலர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாததனால் இந்த நிலைமை ஏற்படுகிறது, எனவே, காவலர் எண்ணிக்கைகையை அதிகப்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே இது பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறேன். எண்ணுவதற்கு நிதியாதாரம் அதிகம் இல்லாத காரணத்தினால் அந்த எண்ணிக்கையை உயர்த்த முடியவில்லை.

திரு. சி. கோவிந்தசாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, வி.ஐ.பி.-க்கள் வருகிறபோது வழியிலே காவலுக்கு நிற்ககூடிய காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இரவு 1 மணி, 2 மணி என்ற நேரம் கடந்து, நிகழ்ச்சி முடிந்து அவர்கள் உரிய இடங்களுக்குத் திரும்புவதற்குரிய வாகன ஏற்பாடு இல்லாமல், அவர்கள் விடிய விடிய வழியிலே வருகிற லாரிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிற ஒரு நிலைமை இருக்கிறது. அதைப்போன்று அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உணவுக் கட்டணமும் போதுமானதாக இல்லாததால், அவர்களுடைய சொந்தக் காசைக்கூட செலவு செய்து, அதுபோன்று காவலுக்கு நிற்கிறபோது, சாப்பிட வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அந்த உணவுக் கட்டணத்தை கூட்டித் தரவும், திரும்பிச் செல்வதற்குரிய வாகன ஏற்பாட்டை செய்வதற்கும் அரசு முன் வருமா என்று முதல்வர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுமானவரையில் வழிநெடுக காவலர்களை நிறுத்தி வைக்கின்ற அந்தப் பழக்கத்தை நிறுத்தி விடவேண்டுமென்று இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே கூறி இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், ஆங்காங்கு 'பேரிகேடு' கட்டப்படுகின்ற அந்த முறையைக் கூட, அதாவது தடுப்பு வேலி கூட கட்ட வேண்டாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி சொல்ல வேண்டுமானால் 19-8-1989-ல் தரப்பட்ட ஆணையின்படி The Chief Minister has desired that the practice of qutting up barricades at several places during the visits of the Chief Minister to districts is expensive and is unnecessary. It has therefore been decided that no barricades are to be put up anywhere in any place for the purpose of controlling the crowds. With the already available railings, policemen on duty should be asked to provide the security arrangements. In exceptional cases, if barricades are necessary for the the Chief

1990 ஏப்ரல் 23]

Minister's visit, advance sanction may be obtained from the Government in Public Department என்று ஒரு ஆணை பிறப்பிக் கப்பட்டு, அது இன்றைக்கு தடுக்கப்பட்டிருக்கிறது. நான் திருமங்கலத்திற்கு சென்றபோது, 'பேரிகேடு' கட்டப்பட்டிருந்தது. அப்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் என்னோடு வந்தார். காரிலே வந்தார், நான் அவரிடத்திலே சொன்னேன். மதுரைக்குச் சென்றவுடன், இந்த 'பேரிகேடு'க்கு எவ்வளவு செலவாயிற்று என்று கேட்டால், 50 ஆயிரம் ரூபாய் செலவாயிற்று என்று சொல்வார்கள்; இதை விசாரித்தால் தெரியும் என்று சொன்னேன். அப்படியே விசாரித் தார். 50 ஆயிரம் ரூபாய் செலவாயிற்று என்று சொன்னார். உடனடியாக இந்தப் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டு மென்று ஆணையிடப்பட்டது. மிக அத்தியாவசியமான இடங் களில், பெரும் கூட்டம் இருக்கின்ற இடங்களில் மட்டும்தான், 'பேரிகேடு' கட்டப்பட வேண்டுமென்றும், தேவைப்பட்டால் ஆங்காங்கு காவல்துறையினர் காவலுக்கு இருந்தால் போதும் என்றும், அதுகூட, நடு வீதிகளில், பெரும் சாலைகளில், இரவு நேரங்களில், காவலர் நிற்கத் தேவையில்லை என்றும் கூறப் பட்டது. ஒரு காவலர் நின்று பாதுகாத்தால், யாரையும் பாது காத்துவிட முடியாது. அந்தக் காவலருக்கே பாதுகாப்பு தேவைப்பட நேரிடும் என்று நான் அதிகாரிகளிடத்திலே கூறி இருக்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வி.ஐ.பி.-க்கள் வரும்போது ஒரு மாவட்டத்தில் இருக் கின்ற அனைத்துப் போலீஸ்களையும் அந்த இடத்திற்கு, 'எஸ் கார்ட்டாக, கொண்டு செல்கிறார்கள். அவர்கள் செக்யூரிட் டிக்கு செல்லும்போது, லோகல் போலீஸ் ஸ்டேஷனில் மர்டர் கேஸ் என்று வந்தால், அதை விசாரிக்க அங்கு காவலர்களோ அதிகாரிகளோ இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆகையினால் வி.ஐ.பி.-க்கள் வரும்போது, செக்யூரிட்டிக்காக தனியாக ஒரு விங் போட அரசு முன் வருமா? இல்லையென்றால் கூட, வி.வி.ஐ.பி.-க்கள் முதலமைச்சர்கள் போன்றவர்கள் வருகிறபோது, மினிமம் ஸ்கெலிடன் போலீஸ்களை அந்த ஸ்டேஷனில் வைத்துவிட்டு தான் மற்ற போலீஸ்களை அனுப்ப வேண்டுமென்று அரசு ஆணை போடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதே கருத்து அமைந்த கேள்வியைத் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் கேட் டார்கள். அதற்கு பதில் அளிக்கும்போது, விளக்கம் அளித்திருக் கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்களு டைய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சுற்றுப் பயணங்களின் போது வருவாய்த்துறை அதிகாரிகளுடைய பணியும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, காஞ்சீபுரத்தில் இருக்கிற சங்கராச்சாரியார் அவர்களைப் பார்க்க வருகிற, பல உயர் பதவிகளில் இருப்பவர்கள், வி.ஐ.பி.-க்கள், அடிக்கடி காஞ்சீபுரத்திற்கு வருகின்ற சூழ்நிலை இருப்பதால், அங்கே வருவாய்த்துறை அதிகாரிகளினுடைய பணி பாதிக்கப் படுகிறது. இதுபற்றி அரசு மாற்று ஏற்பாடுகள் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாதகம் எதுவும் தங்களுக்கு வராமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பெரியவரைப் பார்க்க சிலபேர் செல்கிறார்கள். யாருக்கும் பாதகம் வராமல் பார்த்துக் கொள்வோம்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசைச் சார்ந்த அமைச்சர்கள் மற்றும் வி.ஐ.பி.-க்கள், தமிழகத்திற்கு வருகிறபோது, அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கான செலவுகளை மைய அரசே ஏற்றுக்கொள்கிறதா ? அந்த வகையிலே, மாநில அரசுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகள் ஏதேனும் உள்ளதா ? அதே போல், வெளி மாநில அமைச்சர்கள் வருகிறபோது, அதற்கான காவலர்களுக்கு, அந்தந்த மாநிலங்களே செலவினங்களை ஏற்றுக் கொள்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பிரதமரோ மற்ற அமைச்சர்களோ, வருகின்ற நேரத்தில் பாதுகாப்புத் தேவைகளை மாநில அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஒரு முழுப் புத்தகமே ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பே வெளியிடப்பட்டு, அது மாநில அரசுகளுக்கெல்லாம் அனுப்பப் பட்டிருக்கிறது. கட்சி சம்பந்தமாக அவர்கள் வந்து கலந்து கொள்வார்களேயானால், அந்த கட்சி, மேடைக்கு ஆகிற செலவிலே 25 விழுக்காடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. அதிலேதான், கொஞ்ச தொகை காங்கிரஸ் கட்சியிடமிருந்து அரசுக்கு வரவேண்டுமென்று, முன்பே ஒரு கேள்விக்கு பதில் அளித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள். 292, 1772 மற்றும் 5037 மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளி வைக்கப்பெறுகின்றன.